**வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் - 2015**

---

வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 ஆகஸ்ட் 27 ஆம் திகதிய 2639-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.05 ஆம் பிரிவின் IV ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

---

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன், வீதி அபிவிருத்தி அதிகார சபையானது செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. தேசிய மட்டத்திலான செயற்திட்ட நடவடிக்கைகளின் முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு என்பவற்றிற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறுப்பாக உள்ளது. வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் 170 கிலோமீற்றர்கள் நீளமான தேசிய வீதிகளை புனரமைப்பதும் முன்னேற்றுவதுமே செயற்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்டத்தின் ஆரம்ப மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,980 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 146 மில்லியனானதுடன், அதில் ரூபா 14,950 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 130 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும், வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் ஏறத்தாழ 288 கிலோமீற்றர்கள் நீளமான தேசிய வீதிகளை புனரமைப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியானது 2013 மே 31 இன் 2890 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடனின் கீழ் ரூபா 8,840 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 68 மில்லியனையும், 2013 மே 31 இன் 2891 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடனின் கீழ் ரூபா 3,900 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 30 மில்லியனையும் மேலதிக நிதியளிப்பாக ஒதுக்கியிருந்தது. ஆரம்ப கடன் உடன்படிக்கையின் கீழ் செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2010 ஒக்தோபர் 22 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. மேலதிக நிதியளித்தல் ஒழுங்குகளின் கீழான செயற்திட்ட நடவடிக்கைகள் 2013 மே 13 இல் ஆரம்பக்கப்பட்டிருந்ததுடன் 2018 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கட்டுநிதிக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கட்டுநிதிக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

கடன் பெறுகைகளில் ஆலோசனையாளர்களால் ரூபா 47.68 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் உரிய நிலையான சொத்துக்களின் கீழ் தனித்தனியாக காட்டப்படுவதற்குப் பதிலாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலையாக காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 5.4 ஆம் பிரிவுக்கு முரணாக செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி

அதிகாரசபையின் ஊழியர்களுக்கு செயற்திட்டத்தால் ரூபா 1.68 மில்லியன் தொகை மிகையூதியங்கள் மற்றும் மருத்துவப்படி என்பன செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் அறிமுகப்படுத்தப்பட்ட சூத்திரத்தின் அடிப்படையில் செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களுக்கு மீளாய்வாண்டினுள் ரூபா 23.76 மில்லியன் தொகையான சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறிப்பிடத்தக்க சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 2015 ஆம் ஆண்டின் போது | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | | | | | | |
| கடன் 2639 - எஸ்ஆர்ஜ | 130 | 14,950 | 1,350 | 1,033 | 111.70 | 15,642 |
| கடன் 2890 - எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) | 68 | 8,840 | 2,500 | 1,376 | 21.92 | 3,070 |
| கடன் 2891 – எஸ்ஆர்ஜ | 30 | 3900 | - | 1,006 | 17.82 | 2,497 |
| இலங்கை அரசாங்கம் | 16 | 2,080 | 25 | 15 | 0.42 | 59 |
| | **244** | **29,770** | **3,875** | **3,430** | **151.86** | **21,268** |

### 3.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்ட அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம், 170 கிலோமீற்றர்கள் நீளமான வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களிலுள்ள 10 தேசிய வீதிகளின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஆகையால், 03 புனரமைக்கப்பட்ட தேசிய வீதிகளின் பராமரிப்பு வேலைகளை அடிப்படையாகக் கொண்டு 03 வருடங்கள் செயலாற்றலை உள்ளடக்குகின்ற 10 பொதிகளின் கீழ்

அத்தகைய வீதிகளின் புனரமைப்பு வேலைகளுக்காக வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தங்கள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. மேலும், 02 ஏனைய வீதிகளின் புனரமைப்பிற்கான ஒப்பந்தங்கள் ஆரம்ப அமுலாக்கல் திட்டத்தின் கீழ் வீதிகளின் புனரமைப்பின் மீதான சேமிப்புக்களை பயன்படுத்துவதன் மூலம் 2015 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய வீதிகளின் புனரமைப்பு வேலைகளின் 75 சதவீதத்திற்கு மேல் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. மேலே குறிப்பிடப்பட்டதற்கு மேலதிகமாக, மேலதிக நிதி ஒழுங்குகளின் கீழ் வழங்கப்பட்டிருந்த வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களிலுள்ள 101.63 கிலோமீற்றர்கள் நீளமான 09 ஏனைய வீதிகளின் புனரமைப்பு வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. கவித்திகொலாவ - பதவியா வீதியின் 15+500 கிலோமீற்றர்கள் தொடக்கம் 31+345 கிலோமீற்றர்கள் வரையிலான பிரிவுகளின் புனரமைப்பு வேலைகள் 2015 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

--------------------------------

செயற்திட்டத்தின் செயலாற்றலை அடிப்படையாகக் கொண்ட வீதிப் பராமரிப்பு வேலைகளிற்காக வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புனரமைக்கப்பட்ட வீதிகளின் செயலாற்றலை அடிப்படையாகக் கொண்ட பராமரிப்பு வேலைகளுக்காக பொறுப்பாகவுள்ள தொழில்நுட்பரீதியில் தகுதிவாய்ந்த அலுவலர்கள் வீதி பராமரிப்பு வேலைகளின் மேற்பார்வைக்காக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்பட்ட விளக்கத்தின் பிரகாரம், புனரமைக்கப்பட்ட வீதிகளின் செயலாற்றலை அடிப்படையாகக் கொண்ட பராமரிப்பு வேலைகளுக்காக செயற்திட்ட முகாமையாளர்கள் பொறுப்பாகவுள்ளதுடன் உரிய ஒப்பந்தகாரர்களின் தொழில்நுட்ப பதவியணியினர் செயலாற்றலை அடிப்படையாகக் கொண்ட பராமரிப்பு வேலைகளை மேற்பார்வை செய்வதற்கு வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

(ஆ) செயலாற்றலை அடிப்படையாகக் கொண்ட பராமரிப்பின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் பிரகாரம், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீதிகளின் பராமரிப்பு வேலைகளின் கிரயம் ஆகக்குறைந்த மட்டத்தில் இருக்க வேண்டும். ஆகையால், அதற்காக ஒப்பந்தக்காரர்களால் குறைந்த விகிதங்கள் கோரப்பட்டிருந்தன. எனினும், வவுனியா – ஹொறவபொத்தான வீதி, மதவாச்சி – கெபிதிகொலாவ வீதி மற்றும் கெபிதிகொலாவ – பதவியா வீதிப் பிரிவுகளின் பராமரிப்பிற்காக யதார்த்தமற்ற விகிதங்கள் அதே வீதிகளின் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தக்காரர்களால் விலைமனு ஆவணங்களில் கோரப்பட்டிருந்தது. செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவானது வீதி பராமரிப்பு வேலைகளுக்கான யதார்த்தமற்ற விகிதங்களை கோருவதற்கான காரணங்களை புலனாய்வு செய்வதற்குப் பதிலாக செயலாற்றல் பிணைமுறிகளின் பெறுமதியை அதிகரிப்பதற்கு மாத்திரம் நடவடிக்கை எடுத்திருந்தது.

(இ) இணங்காமை விடயங்கள் தொடர்பாக மேற்பார்வை பொறியியலாளரால் வழங்கப்படுவதற்கு வேண்டப்பட்டிருந்த மாதாந்த பராமரிப்பு அறிக்கை யாழ்ப்பாணம் - பண்னை - ஊர்காவற்துறை வீதிப் பிரிவுகளின் பராமரிப்பு வேலைகளுக்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஈ) ஐ.அ.டொலர். 1.13 மில்லியன் மற்றும் ரூபா 194.14 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்ட ஆலோசனை ஒப்பந்தமானது ஐ.அ.டொலர் 1.09 மில்லியன் மற்றும் ரூபா 231.44 மில்லியனாக திருத்தப்பட்டிருந்ததுடன் வவுனியா – ஹொரவபொத்தான வீதியின் விபரமான வடிவமைப்பு மற்றும் சாத்தியவள ஆய்வுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மேலதிக வேலைகள், வேலை நோக்கெல்லையின் மாற்றங்கள் மற்றும் அஸ்பால்ற் இடுதல் இயலுமையை அபிவிருத்தி செய்தல் நோக்கங்களுக்காக சர்வதேச நியுணர்களை வேலைக்கமர்த்துதல் போன்ற பல்வேறு காரணங்களால் ஆலோசனை சேவைகளுக்கான காலப்பகுதியானது 2015 திசெம்பர் 31 இலிருந்து 2016 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(உ) 22+000 கிலோமீற்றரிலிருந்து 34+950 கிலோமீற்றர் வரையிலான வவுனியா – ஹொரவபொத்தான வீதியின் புனரமைப்பு வேலைகள் மீதான ஒப்பந்தம் 2015 ஏப்ரல் 28 இல் பூர்த்திசெய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் கையளிக்கப்பட்ட பின்னர் ரூபா 7.89 மில்லியன் கிரயத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் மேலதிக வேலைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஒப்பந்த நிபந்தனைகளின் 10.1 ஆம் உட்பிரிவால் வேண்டப்பட்டவாறு வீதி நிபந்தனைகளின் சரிபார்த்தலை மேற்கொள்ளாமல் வீதி கையளிக்கப்பட்டிருந்தது என சுட்டிக்காட்டப்பட்டது. செயற்திட்டப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்பட்ட விளக்கங்களின் பிரகாரம், தனியார் வதிவிடங்கள் போன்றவற்றிற்கு வடிகாலமைப்பு முறைமைகள் மற்றும் வீதி நுழைவு வசதிகள் போன்றவற்றை வழங்குவதற்கு பல பொது வேண்டுதல்கள் இருந்ததுடன் அத்தகைய வேண்டுதல்கள் ஒப்பந்தத்தின் குறைபாடுகள் தெரியப்படுத்தும் காலத்தின் போது பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

(ஊ) றம்வேவவிலிருந்து மதவாச்சி வரையிலான கண்டி – யாழ்ப்பாணம் வீதிப் பிரிவின் முன்னேற்றம் மற்றும் புனரமைப்பிற்கான விலைமனு ஆவணங்களின் விபரமான பொறியியல் வடிவமைப்பு மற்றும் தயாரித்தல் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிகளின் சேமிப்புக்களை பயன்படுத்தி 2015 நவம்பர் தொடங்கப்பட்டிருந்தது. எனினும் அத்தகைய வேலைகள் 2016 மே 31 வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டப் பணிப்பாளரின் விளக்கங்களின் பிரகாரம் ஆலோசனையாளரால் பாதகமான காலநிலை காரணமாக புவியியல் ஆய்வுகளை பூர்த்திசெய்ய முடியாதிருந்தது. செயற்திட்ட காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் வீதியின் முன்னேற்ற மற்றும் புனரமைப்பு வேலைகளை பூர்த்திசெய்வதற்கு இயலுமான வகையில் பல புதிய பாலங்களின் நிர்மாண வேலைகளை குறைப்பதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(எ) மதவாச்சி – மன்னர் - தலைமன்னார் வீதியின் வேலை நோக்கெல்லைகள் பின்னர் மாற்றப்பட்டிருந்ததனால், கரை அணை மற்றும் பாலங்களின் நிர்மாணம் என்பவற்றின் கீழான வேலைகள் உண்மையாக திட்டமிடப்பட்ட வேலைகளிற்கு

மேலதிகமாக 67 சதவீதம் மற்றும் 72 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது. ஆகையால், முறையான வகையில் நிலக்கீழ் வேலைகளை மேற்கொள்ளாமல் அளவீட்டுப்பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தமையை சுட்டிக்காட்டியது. செயற்திட்டப் பணிப்பாளரின் விளக்கங்களின் பிரகாரம், வெள்ளத்தில் மூழ்குவதை தவிர்ப்பதற்காக கரை அணை வேலைகள் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன். உரிய பாலங்கள் இடிந்துவிழும் நிலமையில் இருந்ததால் பல பாலங்கள் மீள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

## 3.4 காணி சுவீகரிப்பு மற்றும் மீளகுடியேற்றல் நடவடிக்கைகள் மீதான சர்ச்சைகள்

யாழ்ப்பாணம் - பண்ணை – ஊர்காவற்துறை வீதியின் புனரமைப்பிற்காக 206 காணித்துண்டுகள் சுவீகரிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 13.39 மில்லியன் நட்டஈடு செலுத்தப்பட்டிருந்தது. எனினும் உரிய பிரதேச செயலகங்களுக்கு அத்தகைய காணிகளின் உரிமை 2015 திசெம்பர் 31 வரையிலும் மாற்றப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட பணிப்பாளரால் மேற்கொள்ளப்பட்ட விளக்கங்களின் பிரகாரம், ஊர்காவற்துறை பகுதியில் வசிக்கின்ற காணி உரிமையாளரர்களில் பலர் வெளிநாட்டில் அல்லது ஊர்காவற்துறைக்கு வெளியே வசிப்பதால் காணி சுவீகரிப்புச் செய்வதில் காலதாமதங்கள் ஏற்பட்டிருந்தது.